எங்கள் தலைவருக்கும் – அண்ணன் தொல்.திருமாவளவனுக்குமிடையே இருப்பது

# தேர்தல் கூட்டணி அல்ல; அது கொள்கைக் கூட்டணி!

## சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 29-**

**எங்கள் தலைவர் அவர்களுக்கும், அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கும் இடையே இருப்பது தேர்தல் கூட்டணி மட்டும் இல்லை, அது ஒரு கொள்கைக் கூட்டணி என்று சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**



சட்டப் பேரவையில் சமூக நலத்துறை மானியம் மீதான பதிலுரையில், அமைச்சர் வன்னியரசு நன்றி தெரிவித்து பேசும்போது, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், குறுக்கிக்கிட்டு பேசியதாவது:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் நன்றி சொன்னார்கள். எனக்கும் நன்றி சொன்னார்கள். குறிப்பிட்டு நான் பேசியதையெல்லாம் பேசினார்கள்.

"என்னுடைய வெற்றியை விட திரு.வன்னியரசு வெற்றி எனக்கு மிக முக்கியம்" என்று நான் பேசியதை குறிப்பிட்டு எனக்கு நன்றி சொன்னார்கள். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவர் சொல்லியிருக்கிறார். அண்ணன் தொல்.திருமாவளவன் அவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்லவில்லை என்று.

ஆனால் அவரிடத்தில் நான் சொல்லிக் கொள்வது, எங்களுடைய தலைவர் அவர்களுக்கும், எழுச்சித் தமிழர் அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கும் இருவர்களுக்குமிடையே இருப்பது தேர்தல் கூட்டணி கிடையாது, தேர்தலுக்கு முன்பு ஒரு கூட்டணி யாகவும் தேர்தல் முடிவுகள் வந்ததற்கு பின்பு ஒரு கூட்டணி மாறுகின்ற கூட்டணி கிடையாது. அது ஒரு கொள்கைக் கூட்டணி.

மேலும் நான் பலமுறை பெருமையாக சொல்லி இருக்கின்றேன். என்னுடைய அரசியல் ஆசான் என்றால் அது அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களை ஏற்றுக் கொள்கின்றேன் என்று பலமுறை சொல்லியிருக்கின்றேன்.

எனவே அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கு என்றைக்குமே எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

ஆதிதிராவிடர் பழங்குடி இன மக்களுக்கு

# தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டது!

## சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பேச்சு!

சென்னை, ஆக.29-

ஆதிதிராவிடர் பழங்குடி இன மக்களுக்கு தி.மு.க. ஆட்சி காலத்தில் தான் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டது என்று- பேரவையில் சமூக நீதித்துறை மானிய கோரிக்கை விவாதத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு குறிப்பிட்டார்.



சட்டமன்றத்தில் நேற்று சமூக நீதித்துறை மானிய கோரிக்கை மீது விவாதம் நடைபெற்றது , இதில் சார்பில் கே.என். நேரு அவர்கள் பங்கேற்று பேசியதாவது:-

இங்கு பேசிய அமைச்சர் நீண்ட நெடிய சொற்பொழிவு வையாற்றி அமர்ந்துள்ளார் .

சமூக நீதித்துறையில் ஒரு குறிப்பிட்ட பணம் செலவு செய்ய வில்லை என்று சிஏஜி அறிக்கையை குறிப்பிட்டு காட்டுகிறார், எந்த ஒரு அரசாக இருந்தாலும் , எந்த ஒரு துறையாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கும்போது, அதற்கு நிர்வாக ரீதியாக சில சங்கடங்கள் இருக்கும், ஒரு சில நேரங்களில் நீதிமன்றத்தில் தடையாணை பெறுவார்கள், அது போன்ற நேரங்களில் அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யாமல் நின்று விடும், அடுத்த ஆண்டு அது தொடரும், இது நடைமுறை,

எனவே சிஏஜி அறிக்கையை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளலாமே தவிர, பணிகளை கைவிட்டு விட்டோம் என்று அர்த்தம் கிடையாது, ஆதிதிராவிட மக்களுக்கு செய்யக்கூடிய பணிகளை செய்யாமல் விட்டு விட்டோம் என்று அர்த்தம் அல்ல, ,

எங்களுக்கெல்லாம் ஒரு பெருமை என்னவென்றால் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலந்தொட்டு கடந்த திராவிட மாடல் ஆட்சியின் இறுதி வரை பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற நன்மைகளை செய்துள்ளோம், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறையை உருவாக்கியதே திமுக தான், அது மட்டுமல்ல கடந்த ஆட்சி காலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஐந்து நபர்களை அமைச்சர்ககளாக நியமிக்கப்பட்டார்கள், குறிப்பாக உயர் கல்வித் துறைக்கு ஆதிதிராவிடர் ஒருவரை அமைச்சராக நியமித்தது திமுக தான்.

நீங்கள் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் தான் ஆகிறது, இந்த ஆட்சி ஓராண்டு நீடித்தால் ( ஒரே கூச்சல் குழப்பம்) , அதாவது ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஒன்றிய அரசாங்கம் சிஏஜி அறிக்கை சமர்ப்பிப்பார்கள், அப்பொழுது தெரியும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, எவ்வளவு செலவு எவ்வளவு செலவு செய்யவில்லை என்று தெளிவாக தெரிந்து விடும்.

இந்த அவையில் ஆரோக்கியமான விவாதத்தை விட்டு விட்டு, உங்கள் ஆட்சியில் இது செய்யவில்லை, சிஏஜி-யில் குறை உள்ளது என்று திசை திருப்புகிறீர்கள், இது தவறான பாதைக்கு வழி வகுக்கிறது என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி

# 48 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

குமரி, ஆக. 29 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி, 48 வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 48 வது வட்டக் கழகச் செயலாளர் எ.அன்சாரி தலைமையில், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் என்.பி. துரை முன்னிலையில் 26.08.2026, புதன்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் நாகர்கோவில், வெள்ளாடிச்சிவிளை பகுதியில் உள்ள B.M.C. மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.



கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் S.R.ஹாஜிபாபு, மாமன்ற உறுப்பினர் M.A.பியாசா ஹாஜிபாபு, கழக நிர்வாகிகள் P.முகம்மது இப்ராஹிம், ஹாஜி அலி, சாகுல் ஹமீது, ராஜதுரை, சுக்கூர், ரபி, ஷாஜகான், ஜகபர் சாதிக், அத்திக் ரஹ்மான், ஆப்தீன் உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்: 1 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.


தீர்மானம்: 2 கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

நிர்வாகம் தெரியாதவர்கள் ஆட்சி செய்தால்,

# பொருளாதார வளர்ச்சி எல்லாம் வராது; விலைவாசி தான் உயரும்!

## தி.மு.க. இளைஞரணி விமர்சனம்!




**திராவிடமாடல் ஆட்சியில் 3.77% ஆக இருந்த விலைவாசியை, இந்த CircusSarkar–இல் 5.45% ஆக உயர்த்தி, சாமானிய மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறது. நிர்வாகம் தெரியாதவர்கள் ஆட்சி செய்தால், பொருளாதார வளர்ச்சி எல்லாம் வராது; விலைவாசி தான் உயரும்!**

கடலூர் மாவட்டம் – புதுப்பேட்டையில்

# திராவிடர் கழக திறந்தவெளி மாநாடு! திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி எழுச்சி உரை!

## முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் – துரை. சந்திரசேகரன் பங்கேற்பு!

கடலூர், ஆக. 29 -

திராவிட மாணவர் இளைஞர் இன எழுச்சி 81 ஆம் ஆண்டு சங்கநாதம் கடலூர் மாவட்டம் பண்ருட்டி அண்ணா கிராமம் ஒன்றியங்கள் சார்பில் புதுப்பேட்டை, பேட்டைத் தெருவில் திராவிடர் கழக திறந்தவெளி மாநாடு நாளை (30.08.2026) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் நடைபெறுகிறது.

மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் மானமிகு சொ. தண்டபாணி வரவேற்புரை ஆற்றுகிறார்.

பொதுக்குழு உறுப்பினர் கோ.புத்தன் தலைமை வகிக்கிறார்.

இந்த மாநாட்டில் தமிழர் தலைவர் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இனமான எழுச்சி உரை ஆற்றுகிறார்.

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.வெ. கணேசன் திராவிட கழக பொதுச்செயலாளர் முனைவர். துரை. சந்திரசேகரன் உரையாற்றுகின்றனர்.

மேலும் அரங்க. பன்னீர் செல்வம் நா.தாமோதரன் க.எழிலேந்தி தென். சிவக்குமார் சி. மணிவேல் நா. பஞ்சமூர்த்தி இரா.பெரியார் செல்வம் இரா. மாணிக்கவேல் வீ.அருணாசலம் வீ. வெங்கடேசன் நா.உதயசங்கர் கோ.வேலு டிஜிட்டல் ராமநாதன், இரமாபிரபா ஜோசப், குணசுந்தரி, சத்தியவதி, கோ.காமராஜ், பா.ஆறுமுகம், இரா. கந்தசாமி செ. பன்னீர்செல்வம் இரா. இராசேந்திரன் க.தமிழேந்தி செ. முனியம்மாள் பூ.சி. இளங்கோவன் மு.இளமாறன் தேவ.நர்மதா த.சீ. இளந்தரையன் டாக்டர் கோ. நந்தகோபாலகிருஷ்ணன் பண்ருட்டி நகர மன்ற தலைவர் திமுக நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன் இரா. குழந்தை வேலன் வி.கே. வெங்கட்ராமன் திமுக பொதுக்குழு உறுப்பினர் நா.பலராமன் ப. மணிவண்ணன் இராமு ( எ)கே. ராமச்சந்திரன் இரா.சுந்தரவடிவில் இரா. இராதாகிருஷ்ணன் வ. ஜெயமூர்த்தி இரா.சந்தோஷ் குமார் சி. சதாசிவம் ஏ. சிவா சா. தட்சிணாமூர்த்தி சா.சாக்ரடீஸ் பல. சிவன் உள்ளிட்ட திராவிட கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொள்கின்றனர்.

பண்ருட்டி நகர தலைவர் மானமிகு நா. புலிக்கொடி நன்றி உரையாற்றுகிறார்.

தமிழ்நாட்டில் தாறுமாறாக எகிறிய அத்தியாவசிய பொருட்களின் விலை!

# காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலை கிடுகிடு உயர்வு!

## இல்லத்தரசிகள் அதிர்ச்சி – கண்டுகொள்ளாத அரசு!

சென்னை, ஆக. 29 -

அத்தியாவசிய பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து வரும் நிலையில், காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலைகளும் கிடுகிடுவென உயர்ந்து வருது இல்லத்தரசிகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. இதை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட போர் உள்ளிட்ட காரணங்களால் கடந்த சில மாதங்களாக கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தேநீர் கடைகள், ஓட்டல்களில் உணவுகளின் விலை உயர்வு மக்களை வாட்டி வதைத்து வந்தது. இதிலிருந்தே மக்கள் மீள முடியாத நிலையில், தற்போது தமிழ்நாட்டில் தாறுமாறாக விலைவாசி உயர்ந்துள்ளது. வேகமாக உயர்த்தப்பட்டு வரும் காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலை தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் இடியாய் இறங்கி வருகிறது. முதலில் அரிசி விலை கணிசமாக உயர்ந்த நிலையில், பிறகு சர்க்கரை விலை உயர்ந்தது. அதைத் தொடர்ந்து இப்போது சமையலுக்கு அத்தியாவசியமாக இருக்கும் வெங்காயத்தின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

தற்போது ஒரு கிலோ சர்க்கரை 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் மீண்டும் வெங்காய தட்டுப்பாடு இல்லத்தரசிகளை வாட்டி வதைக்க தொடங்கியுள்ளது. இந்தியாவில் பருவமழை தாமதம், சில முதன்மை உற்பத்திப் பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு காரணமாக வெங்காயச் சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக காய்கறி கடைகளில் வெங்காயத்தின் விலை ஒரு கிலோ 70 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் சின்ன வெங்காயம் விலையும் ஏறுமுகத்திலேயே இருந்து வருகிறது. தினசரி சமையலுக்கு பயன்படுத்தப்படும் பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது இல்லத்தரசிகளிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது. ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்பனையான 25 கிலோ மூட்டை அரிசி இன்று தற்போது ஆயிரத்து 800 ரூபாய் வரை விற்பனையாகிறது.

அரிசி விலை உயர்ந்த நிலையில் தற்போது எண்ணெய் மற்றும் மளிகை பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால், பொது மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். அடுத்தடுத்த பண்டிகைகள் நெருங்கி வரும் சூழலில், விலை உயர்வு பொதுமக்களை அதிருப்தி அடையச் செய்துள்ளது. தமிழ்நாடு அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

# கோவையில் முதியவர் சரமாரி வெட்டிப் படுகொலை!

## கடந்த 28 நாட்களில் அரங்கேறிய10 கொலைகள்!

கோவை, ஆக. 29 -

கோவை அருகே 55 வயதான முதியவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. த.வெ.க ஆட்சியில் தொடரும் கொலை சம்பவத்தால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கோவை நரசிபுரம் அருகே கலைமகள் கல்லூரி பகுதியில் 55 வயதான நாகராஜ் என்பவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். விசாரணையில், அவரது நண்பரான கந்தசாமி கத்தியால் தாக்கி கொலை செய்தது தெரியவந்ததைத் தொடர்ந்து, அவரை ஆலாந்துறை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆகஸ்ட் மாதம் தொடங்கியதில் இருந்து கோவை மாவட்டத்தில் இதுவரை 10 கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக கூறப்படும் நிலையில், அடுத்தடுத்து நடைபெறும் கொலைகள் பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி தெற்கு மாவட்டம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஏ.பி. அருள், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 28.08.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.